මෝටර් රථ ප්‍රවාහන දෙපාර්තමේන්තුව
மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்
DEPARTMENT OF MOTOR TRAFFIC

තැ. පෙ. අංක 533 - 341, ඇල්විටිගල මාවත, කොළඹ 05.
த. பெ. இல. 533 - 341, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05.
P. O. BOX No. 533 - 341, ELVITIGALA MAWATHA, COLOMBO 05.

මගේ අංකය / எனது இல. / My No. DMT/H/VET/09-1

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2011.06.10

கிழக்கு மாகாண, மாகாண ஆணையாளர் மற்றும் பிரதேச செயலாளர்கள்.

வருடாந்தம் மோட்டார் வாகன வருமான அனுமதிப்பத்திரத்தினை விநியோகிப்பதற்கு வாகன புகை வெளியிடல் சான்றிதழ் சமர்பித்தல்

2008.01.25 ஆம் திகதி 1533-17ம் இலக்க அதி விசேட அரச வர்த்தமானியூடாகப் பிரசுரிக்கப்பட்ட 2008ஆம் ஆண்டின் 01ம் இலக்க மோட்டார் வாகன வளி வெளியிடல் கட்டுப்படுத்தல் சட்டம் மற்றும் 2009-8ம் இலக்க மோட்டார் வாகன (திருத்தம்) சட்டத்தின் 29 (ஆ) ஒழுங்கு விதிக்கமைவாக வாகனத்திற்கான வருடாந்த வருமான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக் கொள்வதற்கு வாகன புகை பரீட்சித்தல் சான்றிதழ் பெற்றுக் கொள்ளல் மற்றும் புகை பரீட்சித்தல் செயல் முறைகளும் 2011.02.01ம் திகதி தொடக்கம் கீழே காணப்படுமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளதுடன் அதன் அடிப்படையில் செயற்படுமாறும் இத்தாழ் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**புதிய வாகனங்கள் (Brand New Vehicles) வாகன புகை பரீட்சித்தல் சான்றிதழ் பெறப்படுவதிலிருந்து விடுவிக்கப்படல்**

புதிதாகப் பதிவு செய்யப்படும் வாகனங்கள் (Brand New Vehicles) மூன்று ஆண்டுகள் வாகன புகை பரீட்சித்தல் சான்றிதழ் பெறப்படுவதிலிருந்து விடுவிக்கப்படுவதானது வளி வெளிவிடல் நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோளினை உரிய முறையில் அடைய முடியாதுள்ளதெனும் கருத்து முன்னேற்ற அறிக்கை கூட்டங்களில் விசேட நிபுணர்களால் அடிக்கடி முன்வைக்கப்படவே அதனை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தொழில் நுட்ப குழுவிடம் கோறப்பட்ட, அக்குழுவும் அதனை உறுதிப்படுத்தியுள்ளது. மேலும் அவ்வறிக்கையில் வாகன அனுமதிப்பத்திரத்தினை பெறுகையில் முதலாம் ஆண்டு காலத்திற்கு மட்டும் வாகன புகை பரீட்சித்தல் சான்றிதழ் பெறப்படுவதிலிருந்து விடுவிக்கப்படலாமென பரிந்துறைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய 2011.02.01ம் திகதி முதல் அமுல் படுத்தப்படும் விதத்தில் அனைத்து புதிய வாகனங்களுக்குமான (Brand New Vehicles) வாகன புகை பரீட்சித்தல் சான்றிதழானது ஓராண்டு காலத்திற்கு மட்டும் விடுவிக்கப்படுவதுடன் இரண்டாம் வருடத்திற்கான வருமான அனுமதிப்பத்திரத்தினை விநியோகிக்கையில் வாகன புகை பரீட்சித்தட் சான்றிதலானது கட்டாயமாகப் பரீட்ச்சிக்கப்பட வேண்டும் என்பதனைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**1975.12.31ம் திகதிக்கு முன்பாக உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்கள் வாகன புகை பரீட்சித்தல் சான்றிதழ் பெறப்படுவதிலிருந்து விடுவிக்கப்படல்**

1975.12.31ம் திகதிக்கு முன்பாக பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் வாகன புகை பரீட்சித்தல் சான்றிதழ் பெறப்படுவதிலிருந்து விலக்கப்பட்டிருந்தது. அச்சுற்று நிருபத்தில் 1975.12.31ம் திகதிக்கு முன்பாக பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் என்பது 1975.12.31ம் திகதிக்கு முன்பாக உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்கள் என திருத்தியமைக்கப்பட்டுள்ளதுடன் அதனை 2011.02.01ம் திகதி முதல் அமுல் படுத்துமாறும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.



...ස් ජනරාල් / ...ஆர் நாயகம் / Commissioner General 0112698717
ෆැක්ස් / தொலைநகல் / Fax 0112694338
කාර්යාලය / அலுவலகம் / Office 0112694331-6
අතිරේක කොමසාරිස් / மேலதிக ஆணையாளர் / Additional Commissioner 0112675027
විදුලි පණිවුඩ / தந்தி / Telegrams — මෝටර්ස් / மோட்டார்ஸ் / MOTORS
පරිපාලන නිලධාරී / நிர்வாக அலுவலர் / Administrative Officer 0112674916
E-mail : comm@motortraffic.gov.lk
Web : www.motortraffic.gov.lk

DMT

புகை பரீட்சித்தல் சான்றிதழினைச் சமர்ப்பித்து வாகன வருமான அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். வாகன வருமான அனுமதிப்பத்திரத்தினை விநியோகிக்கையில் வாகன புகை பரீட்சித்தல் சான்றிதழின் இலக்கத்தினை வருமான அனுமதிப்பத்திரத்தன் வலது புற மேல் மூலையில் குறிப்பிடத் தவற வேண்டாம். புதுப்பிக்கப்பட்ட வாகனம் தொடர்ப்பாக மேற் கூறப்பட்ட விதிமுறைகளை வாகன உரிமையாளரினால் நிறைவேற்ற முடியாதவிடத்து அது தொடர்ப்பான தீர்மானத்தினை மேற்கொள்ள குற்றப்பத்திரிக்கை ஒன்றினை எனக்கு சமர்ப்பிக்குமாறு இத்தால் கேட்டுக் கொள்கிறேன்.

வாகன புகை பரீட்சித்தல் மேற்பார்வையானது இத்திணைக்களம் மத்திய சுற்றாடல் அதிகாரச் சபை வளி வளங்கள் முகாமை நிலையம் மற்றும் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் என்பனவற்றால் மேற்கொள்ளப்படுவதுடன் இந்நிலையங்களை மேற்பார்வையிடும் உரிமை உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. உங்களுக்கு இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் எழுமாயின் 011-310015: அல்லது 011-2692275 என்னும் இலக்கங்களினூடாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் வளி வெளியிட கருத்திட்ட அலுவலகத்திற்கு அல்லது தொழில்நுட்பப் பிரிவுக்கு அழைப்பினை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன் தேசிய மட்டத்தில் முக்கியமானதான கருதப்படும் வளி வெளியிடல் நிகழ்ச்சித் திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு மிக அவசியமானதொன்றாகும் என்பதனையு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.
கட்டணம் தொடர்பான அட்டவணை இணைப்பு 1 எனவும் பொது மக்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டிய விடயங்கள் இணைப்பு 2 எனவும் இத்தால் இணைக்கப்பட்டுள்ளன.

பீ.டீ.எல். தர்மபிரிய
மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம்

பிரதிகள்
1. அனைத்து மாவட்ட செயலாளர்கள்
2. பணிப்பாளர் சுற்றாடல் அமைச்சு
3. அனைத்து மோட்டா வாகன பரீட்சகர்கள்

இணைப்பு 1

வாகனங்களுக்கான புகை பரீட்சித்தட் கட்டணம் பின்வருமாறு

| வாகன வகுப்பு | கட்டணம் (வெட் உள்ளடங்களாக) |
|---|---|
| மோ. சைக்கில் (பெற்றோல்) | 355.00 |
| மோ. சைக்கில் (டீசல்) | 355.00 |
| முச்சக்கர வண்டி (பெற்றோல்) | 435.00 |
| முச்சக்கர வண்டி (டீசல்) | 435.00 |
| மோ. கார் (பெற்றோல்) | 950.00 |
| மோ. கார் (டீசல்) | 950.00 |
| மோ. வான் (பெற்றோல்) | 1,030.00 |
| மோ. வான் (டீசல்) | 1,030.00 |
| மோ. லொறி (பெற்றோல்) | 1,350.00 |
| மோ. லொறி (டீசல்) | 1,350.00 |
| பஸ் வண்டி (பெற்றோல்) | 870.00 |
| பஸ் வண்டி (டீசல்) | 870.00 |
| தனியார் பஸ் வண்டி | 870.00 |
| தனியார் பஸ் வண்டி (டீசல்) | 870.00 |
| ப்ரயிம் மூவர் (டீசல்) | 1,430.00 |

இணைப்பு 2

## வாகன புகை பரீட்சித்தல் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளச் செல்கையில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய அம்சங்கள்

1. வாகனப் பதிவுச் சான்றிதழ் எடுத்துச் செல்லப்படல் வேண்டும்
2. இயந்திர மற்றும் அடிச்சட்டக இலக்கங்கள் இலகுவாக வாசிக்கக் கூடியவாறு சுத்திகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்
3. வாகனம் பரீட்சிக்கையில் அதன் இயந்திரமானது செயற்படு உஷ்ன நிலையில் இருக்க வேண்டுமாகையினால் குறைந்தப் பட்சம 10 நிமிட நேரம் உயிரிப்பிக்கப்பட்டு வைத்திருத்தல் வேண்டும்.
4. எண்ணெய் மற்றும் உரிய முறையிலன்றி வேறு வழிகளினால் வளி கசியும் வாகனங்கள் பரீட்சிக்கப்பட மாட்டாது.
5. வாகனத்தில் நீா கசிதலின்றி இயந்திரம் உரிய முறையில் செயற்படல் வேண்டும். அவ்வாறன்றி பரீட்சிக்கப்படும் சந்தா்ப்பத்தில் அவ்வாகனம் பரீட்ச்சிக்கப் பிரயோகிக்கப்படும் முறையின் நிமித்தம் பழுதடைந்தால் அது தொடர்ப்பான நட்டம் உரிமையாளரினால் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.